# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.282/பேரூ/2023
நாள். 26 .10.2023

திரு. ஆர்.மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி ,
மதுரை மாவட்டம். .... எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், பிளாட் 5, அய்யப்பன் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ஆர்.மயில்சாமி என்பவரது 03.08.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.08.2023 அன்று பெறப்பட்டு, 282/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், பிளாட் 5, அய்யப்பன் தெரு, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ஆர்.மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மதுரை மாவட்டம், வடக்கு வட்டம், வாடிப்பட்டி பேரூராட்சி பகுதிகளில் அதிகமான தெருநாய்கள் சுற்றித் திரிகிறது. தெரு நாய்களில் பெரும்பாலானவை ரேபிஸ் உள்ளிட்ட தொற்றுகளுக்கு ஆளாகி உள்ளன ஒவ்வொரு தெருவிலும் குழந்தைகள், மாணவ, மாணவிகள், பெண்கள் மற்றும் முதியவர்களையும் கடித்துவிடுகின்றன இந்த வெறிநாய்கள் கடித்துவிடுவதால் சில நபர்கள் இறந்துவிடுகிறார்கள். மேலும், இரண்டு சக்கர வாகன ஓட்டிகள் செல்லும்போது தெரு நாய்கள் திடீரென்று குறுக்கே செல்வதால் வாகன ஓட்டிகள் கீழே விழுந்து விபத்துக்குள்ளாவதும், சில நபர்கள் இறக்கவும் நேரிடுகிறது.

மேலும், வீடுகளில் செல்லப்பிராணியாக நாயை வளர்த்து பின்னர் தெருக்களில் விட்டுவிடுகின்றனர். இதனால் வாடிப்பட்டி பேரூராட்சியின் அனைத்து வார்டுகளிலும் தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நாய்களுக்கு பயந்து இப்பகுதிகளில் வாழும் பொதுமக்கள் அச்சத்தால் வாழ்ந்து வருகிறார்கள். மேலும் இப்பகுதியில் வளர்க்கப்படும் ஆடு, மாடு போன்றவைகளையும் தெரு நாய்கள் கடித்து விடுவதாலும் சில கால்நடைகள் இறக்க நேரிடுகிறது.

எனவே, வாடிப்பட்டி பேரூராட்சியின் அனைத்து வார்டுகளிலும் வாழும் பொது மக்கள், குழந்தைகள், மாணவ மாணவியர், பெண்கள், முதியவர்கள் மற்றும் இரண்டு சக்கர வாகன ஓட்டிகளையும் தெரு நாய்கள், வெறிநாய்களிடமிருந்து காப்பாற்றுவதற்கு தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தியும், இப்பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை செய்தும் வெறி நாய் தடுப்பூசி (ARV) போட்டும், The Animal Birth Control Rules 2023 விதி 9 (A) சட்டத்தை பின்பற்றியும் பொது மக்கள் வெளியே சென்று வரவும், அச்சமில்லாமல் வாழ வழிவகை செய்தும், இது நாள் வரையிலும் தெரு நாய்கள் மற்றும் வெறிநாய்களை கட்டுப்படுத்தத் தவறிய வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடுமையான துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகவும் பணிவன்புடனும் தாழ்மையுடனும் வேண்டிக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

**3) வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கவில்லை:–**

(4) மனுதாரரும் மற்றும் வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் திருநெல்வேலி முகாமில் 06.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5) 06.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு.ஆர்.மயில்சாமி ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–**

"மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தெரு நாய்கள் அதிக அளவில் சுற்றித் திரிகின்றன. இதனால் அப்பகுதியில் வசிக்கும் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அச்சத்துடன் நடமாடி வருகின்றனர். தெருநாய்கள் உள்ள பகுதியில் செல்லும் பள்ளி மாணவ மாணவியர் மற்றும் வாகன ஓட்டிகள் சிலர் தெருநாய் கடிக்கு ஆளாகியுள்ளனர். அங்கு திரியும் தெருநாய்களுக்கு ரேபிஸ் நோய் உள்ளது. மேலும் வாகனங்களின் குறுக்கே சில நாய்கள் அங்கும் இங்கும் செல்வதால் வாகன ஓட்டிகள் சிலர் தடுமாறி கீழே விழுந்துள்ளனர்.

எனவே, பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் அச்சமின்றி சென்றுவர அங்குள்ள தெருநாய்களை பிடித்து, Animal Birth Control Rules 2023-ன்படி அவற்றிற்கு இனப்பெருக்க கட்டுப்பாடு சிகிச்சையளித்தும், அவற்றிற்கு வெறிநாய் தடுப்பூசி (AVR) செலுத்தவும் மேலும் அப்பகுதியில் தெருநாய்கள் சுற்றித் திரிவதை கட்டுப்படுத்தவும் பேரூராட்சி தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்திடுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.பா.ஜெயலட்சுமி என்பவர் 06.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"வாடிப்பட்டி பேரூராட்சியில் சுற்றித் திரியும் நாய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு, தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவும், வெறிநாய் தடுப்பூசி செலுத்தவும் நிதி ஏதும் பேரூராட்சியால் பெறப்படவில்லை. எனவே, தெருநாய்களை கட்டுப்படுத்தவும், அவற்றிற்கு இனப்பெருக்கக் கட்டுப்பாடு சிகிச்சையளிக்கவும், அவற்றிற்கு வெறிநாய் தடுப்பூசி (AVR) செலுத்தவும் மதுரை மாநகராட்சியில் கோரப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியிடமிருந்து அனுமதி பெற்றவுடன், பேரூராட்சியில் சுற்றித் திரியும் நாய்கள் பிடிக்கப்பட்டு அவற்றிற்கு தடுப்பூசியும், இனப்பெருக்கக் கட்டுப்பாடும் செய்யப்பட்டு, அவை பிடித்த இடத்திலேயே விடப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல்அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் திரு.ஆர்.மயில்சாமி என்பவர் தனது 03.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் வாடிப்பாடி பேரூராட்சி பகுதிகளில் தெருநாய்கள் அதிக அளவில் சுற்றித்திரிவதாகவும் அவற்றில் பெரும்பாலான நாய்களுக்கு ரேபிஸ் நோய் தொற்றுள்ளதன் காரணமாக பொதுமக்களையும் மற்றும் கால்நடைகளையும் கடித்து வருவதால், பொதுமக்கள், குழந்தைகள் மற்றும் மாணவ – மாணவியர் மிகுந்த அச்சத்துடன் தெருக்களில் செல்வதாகவும், தெரு நாய்களை கட்டுப்படுத்த உரியநடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறும் கோரியுள்ளார்.

''விலங்குகள் வதை தடுப்புச் சட்டம் 1960–ன் கீழ், விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு விதிகள்–2023, மார்ச் 10, 2023 தேதியிட்ட அறிவிக்கையின் வாயிலாக மத்திய அரசு வெளியிட்டுள்ளது. விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு (நாய்கள்) விதிகள், 2001 ரத்து செய்யப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க இந்த விதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. தெரு நாய்களை வேறு இடங்களில் கொண்டு விடுவதை அனுமதிக்க முடியாது என்று பல்வேறு தீர்ப்புகளில் உச்சநீதிமன்றம் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இந்த விதிகளின்படி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் / நகராட்சிகள் / மாநகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகள் உள்ளிட்டவை, தெரு நாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூசி போடுவதற்கான விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு திட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதுப்போன்ற பணிகளை மேற்கொள்ளும்போது விலங்குகளை வதை செய்யும் பிரச்சனையும் தீர்க்கப்பட வேண்டும். இந்த விதிகளை முறையாக அமல்படுத்தி, விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு திட்டத்தை உள்ளாட்சி அமைப்புகள் செயல்படுத்தலாம். இதன் மூலம் விலங்குகள் பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்களில் கவனம் செலுத்தப்பட்டு தெரு நாய்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும்.

விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு மற்றும் ரேபிஸ் நோய்த் தடுப்புத் திட்டங்களையும் முறையாக நகராட்சிகள் செயல்படுத்த வேண்டும். தெரு நாய்களை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லாமல் நாய்களுக்கு ஏற்படும் பிரச்சனையை எவ்வாறு தீர்ப்பது என்பதற்கு இந்த விதிகளில் வழிமுறைகள் இடம்பெற்றுள்ளன.

விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு திட்டத்திற்காக இந்திய விலங்குகள் நல வாரியத்தால் பிரத்தியேகமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் இத்திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும். இது போன்ற நிறுவனங்களின் பட்டியல் வாரியத்தின் இணையதளத்தில் விரைவில் பதிவேற்றம் செய்யப்படும். இது சம்பந்தமான அறிவிப்பை மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறைகளுக்கு மத்திய அரசு ஏற்கனவே அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது."

மேற்காணும் சூழ்நிலையில், மத்திய அரசின் விதிகளையும், The Prevention of Cruelty (Capture of Animals) Rules, 1979 மற்றும் The Animal Birth Control Rules 2023 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளையும் பின்பற்றி வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் வாடிப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் சுற்றித்திரியும் தெருநாய்களை மேலே குறிப்பிட்டுள்ள விதிகளின்படி இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவும், பொதுமக்கள், மாணவ – மாணவியர் அச்சமின்றி நடமாட வழிவகை செய்வதை உறுதிப்படுத்துமாறும் வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, அக்டோபர் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. R.மயில்சாமி
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்திநகர், புதுவிளாங்குடி,
மதுரை–18.

2) செயல் அலுவலர்,
வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி ,
மதுரை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
02/11/2023